DINAMALAR
National Tamil Daily

# பிரபல நிறுவனங்களின் பெயரில் போலி சட்டைகள் விற்பனை

Added : ஜன 07, 2022  01:02

Share



மதுரை :மதுரை நகரில் பிரபல நிறுவனங்களின் பெயரில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 320 போலி சட்டைகளை அறிவுசார் சொத்துரிமை போலீசார் பறிமுதல் செய்தனர்.பெங்களூரு சோமசுந்தரம் பிரபல சட்டை நிறுவனங்களின் விநியோகிஸ்தர். இவரது ஆட்கள் திடீர் ஆய்வில் மதுரை காளவாசல் ராம்நகரில் பஷீர்அகமது என்பவரின் துணிக்கடையில் பிரபல நிறுவனங்களின் பெயரில் சட்டைகள் விற்கப்பட்டது தெரிந்தது.

அறிவுசார் சொத்துரிமை பிரிவு இன்ஸ்பெக்டர் மகாலட்சுமியிடம் சோமசுந்தரம் புகார் அளித்தார். போலீசார் சோதனையிட்டு ரூ.96 ஆயிரம் மதிப்புள்ள 320 சட்டைகளை பறிமுதல் செய்தனர்.போலீசார் கூறுகையில், "ரூ.ஆயிரம், ரூ.2 ஆயிரம் மதிப்புள்ள சட்டைகளை புத்தாண்டு, பொங்கல் சலுகை என்ற பெயரில் ரூ.600க்கு விற்றுள்ளனர். இச்சட்டைகளை பெங்களூருவில் உள்ள ஒரு போலி நிறுவனத்திடம் இருந்து வாங்கியுள்ளனர். வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது," என்றனர்.

Source : https://www.dinamalar.com/news_detail.asp?id=2931618